2022 ஏப்ரல் 18] [திரு. கே.என். நேரு]

தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வெறும் 80 இலட்சம் ரூபாய் அளவில்தான். . .(குறுக்கீடு) என்னைப் பாருங்கள். கேள்வி கேட்டுவிட்டு நீங்கள் இருவரும் அங்கு பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, அந்த மாவட்டத்தில் பேரூராட்சிகள் அதிகம். அதனால் அவர் கேட்டுள்ளார். அந்த மாவட்டத்தில் மட்டும். . . .*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு என்று ரூ.3 கோடி ஒதுக்கப்படுகிறது. அதில் கடந்த காலத்தில் ரூ.3 கோடிக்கு எப்படி செலவு செய்ய வேண்டும் என்று அரசாணை வெளியிட்டு, எந்தெந்தப் பணிகளுக்கு செலவு செய்யப்பட வேண்டும் என்று இருந்தது. தற்போது நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த மூன்று கோடியில் இரண்டு கோடியே இருபது இலட்சம் ரூபாய் சட்டமன்ற உறுப்பினர் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரண்டு கோடியே பத்து இலட்சம் ரூபாய் (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள். பிறகு நாம் கேட்டுக்கொள்ளலாம். நேரம் தற்போது இல்லை. (குறுக்கீடு) உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது உறுப்பினர்கள் ரூபாய் இரண்டு கோடியே பத்து இலட்சத்திற்கு என்ன திட்டம் வேண்டுமானாலும் பேரூராட்சியில் எடுத்துக்கொள்ளலாம். எனவே, அந்த இரண்டு கோடியே பத்து இலட்சம் ரூபாய் போக மீதமுள்ளதை குடிதண்ணீர் பிரச்சினையாக இருந்தாலும், சாலைப் பிரச்சினையாக இருந்தாலும் தேவைப்பட்ட இடத்தில் சிறப்பு நிதியாக ஒதுக்கித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பிற்பகல் 12–35

6. அறிக்கை அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை*

[பேரவைத் தலைவர்] [2022 ஏப்ரல் 18

அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2022 ஆம் ஆண்டுக்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 2–வது அறிக்கையை குழுவின் சார்பாக மனமுவந்து பேரவைக்கு அளிக்கின்றேன்.

7. மானியக் கோரிக்கைகள், 2022-2023, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 41-வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

(ஆ) கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

(அ) கோரிக்கை எண் 41-வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2022–2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 41–வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.7,474,53,59,000/–, மூலதனக் கணக்கில் ரூ.74,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.40,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.